# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8097170

1. District : கடலூர் மாவட்டம் | PS: ஊ.த.க. பிரிவு காவல்நிலையம் | Year: 2019 ஆண்டு | FIR No.: 2/2019 மு.த.அ. எண் | Date: 13.02.2019 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 — Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: As Amended by The Prevention of — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல் 13.02.2019 09.30 hrs — Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.02.2019 — Time நேரம் : 1600 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - I — Time நேரம் : 1600 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 55 கி.மீ. தென்மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி வளைபமாதேவி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P S -- District --
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் C. வீரமணி — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சின்னசாமி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் டாஸ்மாக் சேல்ஸ்மேன் — (g) Address : முகவரி பெரிய தெரு, வளையமாதேவி, புவனகிரி தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   மோகன், சூப்ரவைஸ்சர், டாஸ்மாக், வளையமாதேவி

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   ---

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

——

10. Total value of properties stolen / involved : ——
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: ——
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

இன்று 13.02.2019 ஆம் தேதி மாலை 16.00 மணிக்கு காவல் ஆய்வாளர் S,மாலா ஆகிய நான், கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, அலுவலகத்திற்கு வந்த கடலூர் மாவட்டம் புவனகிரி தாலுக்கா, வளையமாதேவி, பெரியதெரு, சின்னசாமி மகன் வீரமணி என்பவர், என்னிடம் கொடுத்த கணினி தட்டச்சு புகார் மனுவின் விவரம் பின்வருமாறு அனுப்புனர் C. வீரமணி, த/பெ சின்னசாமி, பெரிய தெரு, வளையமாதேவி, புவனகிரி தாலுக்கா, கடலூர் மாவட்டம், பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, கடலூர். நான் புவனகிரி தாலுக்கா, வளையமாதேவி கிராமத்தில் உள்ள டாஸ்மாக் கடை எண்.2515 யில் சேல்ஸ்மேனாக வேலை செய்து வருகிறேன்.

(தொடர்ச்சி பக்கம் -3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது, சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

C. [signature] 13-2-2019

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 13/2/19.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. MALA
Rank: நிலை Inspector of police No. எண் ..........
V&AC, Cuddalore.

நான் M.Com., படித்துள்ளேன். நான் 2003 ஆம் வருடம் நெய்வேலியில் உள்ள டாஸ்மாக் கடையில் சேல்ஸ்மேனாக பணிக்கு சேர்ந்தேன். பின்னர் 2006 ஆம் வருடம் பரங்கிபேட்டை – விருத்தாசலம் நெடுஞ்சாலையில் வளையமாதேவி கிராமத்தில் உள்ள டாஸ்மாக் கடைக்கு பணிமாறுதல் செய்யப்பட்டேன். 2016 ஆம் ஆண்டு நீதிமன்ற உத்தரவுப்படி நான் வேலை செய்து வந்த டாஸ்மாக் கடை மூடப்பட்டது. பின்னர் என்னுடைய மனைவி பெயரில் வளையமாதேவி கிராமத்தில் இருந்த நிலத்தில் கட்டிடம் கட்டி, அதனை டாஸ்மாக் கடை நடத்த வாடகைக்கு விட்டோம். அக்கடையில் தான் நான் தற்போது சேல்ஸ்மேனாக வேலை செய்து வருகிறேன். நான் வேலை பார்க்கும் கடையில் என்னை போல இரண்டு சேல்ஸ்மேன்களும், சூப்பர்வைஸ்சராக மோகன் என்பவரும் வேலை செய்து வருகின்றனர். கடந்த ஜனவரி மாதம் பொங்கலுக்கு முன்பு சூப்பர்வைஸ்சர் மோகன், என்னிடம் பொங்கல் சமயத்தில் அதிகமாக மதுவிற்பனை நடக்கும் என்றும், அப்போது மதுபாட்டில்களை கூடுதல் விலை வைத்து விற்று தனக்கு கமிஷன் கொடுக்கவேண்டும் என வற்புறுத்தினார். ஆனால் நான் மதுபாட்டில்களை சரியான விலைக்கே விற்றேன். இருப்பினும் சூப்பர்வைஸ்சர் மோகன் என்னிடம் கமிஷன் கேட்டார், அதை நான் கொடுக்கவில்லை என்று என் மீது அவருக்கு கோபம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் இன்று 13.02.2019 காலை 09.30 மணியளவில் எங்க ஊர் பஸ் ஸ்டாப் அருகில் நான் நின்று கொண்டிருந்த போது, அங்கு வந்த சூப்பர்வைஸ்சர் மோகன் என்னிடம், நான் வேலை பார்த்து வரும் கடையில் இருந்து என்னை வேறு கடைக்கு மாற்ற வேண்டும் என கடலூர் டாஸ்மாக் மாவட்ட மேலாளர் அவர்களுக்கு புகார் அனுப்பி உள்ளதாகவும், மாவட்ட மேலாளர் விசாரணை செய்து என்னை வேறு கடைக்கு மாற்றிவிடுவார் என்று சொன்னார். என்னை வேறு கடைக்கு மாற்றாமல் இருக்க சூப்பர்வைஸ்சர் மோகன் ரூ.10,000/– பணம் கேட்டார். நான் பணத்தை ஏற்பாடு செய்துவிட்டு வருவதாக சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அவர் சொன்னபடி கமிஷன் தராத காரணத்தால் கோபம் கொண்டு என் மீது புகார் அனுப்பியுள்ளதாக தெரிகிறது. ஆனால் என்ன காரணத்திற்காக புகார் அனுப்பியுள்ளார் என்பது பற்றி தெரியாது. சூப்பர்வைஸ்சர் மோகன் கேட்கும் ரூ.10,000/– பணத்தை எனக்கு கொடுக்க விருப்பம் இல்லாததால், சூப்பர்வைஸ்சர் மோகன் மீது நடவடிக்கை எடுக்க கோரி, தங்களிடம் புகார் மனு கொடுத்து கொள்கிறேன். சூப்பர்வைஸ்சர் மோகன் கேட்ட பணம்

S. Mala
13/2/19.
Inspector of Police,
VDAC, Cuddalore.

ரூ.10,000/–த்தை எடுத்து கொண்டு வந்துள்ளேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிக்கு sd- C.Veeramani, 13.02.2019. ஐயா, இன்று 13.02.2019ம் தேதி மாலை 16.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, வாதி வீரமணி என்பவர் அலுவலகம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று, வாதி மற்றும் புகாரில் குறிப்பிட்டுள்ள குற்றம் சாட்டப்பட்டுள்ள அலுவலர் பற்றியும் புகாரின் உண்மை தன்மை பற்றியும் இரகசிய விசாரணை செய்ததில் வாதி கொடுத்த புகாரில் குற்றம் சாட்டப்பட்டுள்ள அலுவலர் மீது பிடிக்கக்கூடிய குற்றத்திற்கான முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால், இன்று 13.02.2019ம் தேதி காலை 16.30 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண். 2/2019, U/s 7 Prevention of Corruption Act 1988, as Amended by The Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. பின்னர், இதன் அசலை வாதி கொடுத்த புகார் மனுவுடன் இணைத்து Honourable Chief Judicial Magistrate cum Special Judge, Cuddalore அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

S. Velu
13/2/19.
Inspector of police.
V&AC, Cuddalore.